**சுருக்கம்**

கைத்தறித் தொழில் – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை – 2013–2014ஆம் ஆண்டு முதல் 2015–2016ஆம் ஆண்டு வரை ஓராண்டிற்கு 2000 பெடல் தறிகள் வீதம் கைத்தறி நெசவாளர்களுக்கு 6000 பெடல் தறிகள் வழங்க நிருவாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை**

அரசாணை(நிலை) எண்.227

நாள் 11.10.2013
விஜய புரட்டாசி 25
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது:–

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கை, நாள் 08.05.2013.
2. அரசாணை (நிலை) எண்.118, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (இ2) துறை, நாள் 31.5.2013.
3. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.16560/2013/ஜே1, நாள் 21.05.2013 மற்றும் 24.05.2013.

------

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8.5.2013 அன்று கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> “நெசவுத் தொழிலை மேம்படுத்தும் வகையிலும், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய தறிகளில் நெசவாளர்கள் உற்பத்தி மேற்கொள்ளவும், அதன் மூலம் அவர்கள் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையிலும், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி, கடலூர், வேலூர், திருச்செங்கோடு, சேலம் மற்றும் மதுரை பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்கு 1/2 குதிரை திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட 6,000 பெடல் தறிகள் அரசின் மானியத்துடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான மொத்த செலவினம் 24 கோடி ரூபாய் ஆகும். ஆண்டொன்றிற்கு 2,000 பெடல் தறிகள் வீதம் மூன்று ஆண்டுகளில் வழங்கப்படும்”.

2. பார்வை 3–இல் படிக்கப்பட்ட கடிதங்களில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பிலும் மற்றும் தனியாரிடத்திலும் உள்ள தறிகளில் விலையில்லா வேட்டி, சேலை ரகத்தினையொத்த ரகங்களை நெசவு மேற்கொள்ளும் நெசவாளர்களை விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தில் ஈடுபடுத்தி, கைத்தறி நெசவாளர்களின் தொடர்வேலை வாய்ப்பினை உறுதி செய்வதோடு, இத்திட்டத்திற்கு அவர்களின் பங்களிப்பினை அதிகரிக்கவும், விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய தறிகளில் உற்பத்தி மேற்கொள்ளவும், தற்போது பெறும் நெசவுக் கூலியை விட கூடுதலான நெசவுக்கூலி ஈட்டவும், கைத்தறி நெசவாளர்களுக்கு மொத்தம் 6000 பெடல் தறிகள் வழங்குவது அவசியமாகிறது என தெரிவித்துள்ளார்.

3. மேலும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் இதன் மூலம் திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி, கடலூர், மதுரை, திருச்செங்கோடு மற்றும் சேலம் உள்ளிட்ட பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள நெசவாளர்கள் பெருமளவில் பயன் அடைவார்கள் எனவும் மேற்காணும் 6000 பெடல் தறிகளை வழங்குவதற்கு கீழ்க்காணும் விவரப்படி நிதி தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்:–

| | |
|---|---|
| ஒரு பெடல் தறியின் விலை | ரூ.40,000/– |
| 1/2 குதிரை திறன் கொண்ட ஒரு மின் மோட்டார் விலை | ரூ. 4,000/– |
| **மொத்தம்** | **ரூ.44,000/–** |

மேற்குறிப்பிட்டுள்ள இனங்களில் பெடல் தறிக்கு தேவைப்படும் தொகை ரூ.40,000/–ஐ அரசு மானியமாகவும் 1/2 குதிரை திறன் கொண்ட ஒரு மின்மோட்டார் கொள்முதல் செய்ய தேவைப்படும் தொகை ரூ.4,000/–ஐ பயனாளியின் பங்களிப்பாகவும் கொண்டு 6000 பெடல் தறிகளை வழங்கலாம் எனவும் அதன்படி, ஒரு பெடல் தறிக்கு சுமார் ரூ.40,000/– வீதம் 6000 பெடல் தறிகளுக்கு மொத்தம் ரூ.24.00 கோடியை ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையை செயல்படுத்தும் பொருட்டு, மேற்காணும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:–

(i) கைத்தறி நெசவாளர்களின் வேலை பளுவினை குறைத்து வருவாயை அதிகரிக்கும் நோக்குடன் திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி, கடலூர், வேலூர், திருச்செங்கோடு, சேலம் மற்றும் மதுரை பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்கு 2013–2014ஆம் ஆண்டு முதல் 2015–2016ஆம் ஆண்டு வரையிலான 3 ஆண்டுகளுக்கு, ஓராண்டிற்கு 2000 பெடல் தறிகள் வீதம் அதாவது ஓராண்டிற்கு ரூ.8 கோடி என்ற அளவில் 1/2 குதிரை திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட

6,000 பெடல் தறிகள் வழங்குவதற்கு தேவைப்படும் தொகை ரூ.24,00,00,000/– (ரூபாய் இருபத்து நான்கு கோடி மட்டும்) வழங்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நிருவாக அனுமதி வழங்கப்படுகிறது:–

(அ) செலவினம் ரூ.24.00 கோடிக்கு மிகாமல் செயல்படுத்தப்பட வேண்டும்;
(ஆ) உரிய ஒப்பந்தப்புள்ளி நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்;
(இ) பயனாளிகளின் பங்களிப்பு தொகை ரூ.4,000/–ஐ பெற்ற பின்னரே பெடல் தறி வழங்கப்பட வேண்டும்;

(ii) 2013–2014ஆம் ஆண்டிற்கு தேவையான 2000 பெடல் தறிகள் கொள்முதல் செய்வதற்கான தொகை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 4.50 கோடி மற்றும் பார்வை இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி ரூ. 3.50 கோடி, ஆக மொத்தம் ரூ.8.00 கோடி ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(iii) 2014–2015 மற்றும் 2015–2016ஆம் ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் 2000 பெடல் தறிகள் வீதம் வழங்க தேவைப்படும் தொகையான ரூ.16 கோடியினை ஆண்டொன்றிற்கு ரூ. 8 கோடி வீதம் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யும் பொருட்டு நிதித் (தொழில்கள்) துறைக்கு உரிய கருத்துருவினை அனுப்புமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. 2014–2015 மற்றும் 2015–2016ஆம் ஆண்டுகளில் ஒப்பளிப்பு செய்யப்படவிருக்கும் தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைத்து நிருவகித்தல் வேண்டும்:–

"2851–00 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 103 கைத்தறித் தொழில்கள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II – மாநிலத் திட்டம் – KX. கைத்தறி நெசவாளர்களுக்கு நிதியுதவி – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

(த.தொ.கு.2851–00–103–KX–0932)

6. 2014–2015 மற்றும் 2015–2016ஆம் ஆண்டுகளில் ஒப்பளிப்பு செய்யப்படவிருக்கும் தொகையினை உரிய ஆணைகள் மூலம் பெற்று செலவு மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7. கைத்தறி நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய பெடல் தறி வழங்குவது குறித்த முன்னேற்ற அறிக்கையினை ஒவ்வொரு காலாண்டிற்கும் அரசுக்கு அனுப்புமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண்.49890/தொழில்கள்/2013, நாள் 11.09.2013–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்., சென்னை – 600 008.
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை– 600 018/( பெயரில்).
மாநில தலைமை கணக்காயர் (CA), சென்னை– 600 018 /( பெயரில்).
மாநில கணக்காயர் (CAS), சென்னை– 600 009.

நகல்:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நிதித் (தொழில்கள் / வ.செ.பொ.I / II) துறை, சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1) துறை, சென்னை–9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 11.X.2013